வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 29.07.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 209 பக்கங்கள் : 12

# அரியாலை மனித புதைகுழி அகழ்வு செயன்முறையில் சர்வதேச கண்காணிப்பும் நிபுணத்துவமும் அவசியம்

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 29

**நீதியை நிலைநாட்டுவதில் உள்ளகப் பொறிமுறைகளின் நீண்டகாலத் தோல்வியைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அரியாலை மனிதப்புதைகுழி அகழ்வு செயன்முறையில் நிலையான சர்வதேச கண்காணிப்பு உள்வாங்கப்படவேண்டியது மிக அவசியமாகும். அதற்கமைய சுயாதீன சர்வதேச தடயவியல் நிபுணர்கள் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும். அகழ்வு செயன்முறை தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் வெளிப்படைத்தன்மை வாய்ந்த முறையில் தெளிவுபடுத்தவேண்டும் என சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

அதுமாத்திரமன்றி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கை தொடர்பான தீர்மானத்தைப் புதுப்பிக்கவேண்டும் எனவும் அந்த ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரியாலை சித்துபாத்தி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இதுகுறித்து சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு,

அரியாலை - சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் ஞாயிற்றுக்கிழமை (27) வரையான காலப்பகுதியில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்குச் சொந்தமானவை என சந்தேகிக்கப்படுபவை உள்ளடங்கலாக 101 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை நோக்கிய பயணத்தில் இந்த மனிதப்புதைகுழி அகழ்வு மிகமுக்கியமான முதற்கட்ட செயன்முறையாகும்.

அதேவேளை இந்த அகழ்வுப்பணிகள் மற்றும் விசாரணை செயன்முறை என்பன சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். குறிப்பாக அவை உயிரிழந்தோரினதும், அவர்களது குடும்பத்தாரினதும் உரிமைகளையும் கௌரவத்தையும் 11

## தமிழ் அரசியல்வாதிகளுக்கு துணிச்சல் இருக்கிறதா?

### வெலிக்கடைச்சிறை படுகொலைகள் நினைவேந்தலில் பத்திரிகையாளர் கேள்வி

**சி. தில்லைநாதன்**



யாழ்ப்பாணம், ஜூலை 29

வெளிநாடுகளுக்கு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து கொண்டிருப்பதால் வடக்கு மாகாணம் இலங்கையில் சனத்தொகையில் மிகவும் குறைந்த மாகாணமாகி விட்டது. அடுத்தடுத்த தேர்தல்களில் வடக்கில் வாக்காளர்களின் தொகை மேலும் குறைவடையும் ஆபத்து இருக்கிறது என்று எச்சரிக்கை செய்திருக்கும் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம், "மண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்று உரத்துக்குரல் கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை புலம்பெயரவேண்டாம் என்று 11

## மாகாண சபைகள் தேர்தலை தாமதிக்காமல் நடத்துங்கள்

### அரசிடம் கோருகின்றது பவ்ரல் அமைப்பு

கொழும்பு, ஜூலை 29

நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் தேர்தல்களை மேலும் தாமதிக்காமல் உடனடியாக நடத்துமாறு சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயல்பாட்டு அமைப்பு (பவ்ரல்) அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் பவ்ரல் அமைப்பு இந்த விடயத்தை கோரியுள்ளது. 11

## நல்லூரானுக்கு இன்று காலை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு 11

## மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் பதவிக்காலத்தை நிறைவு செய்ய முயற்சி

### அரசுமீது தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 29

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கைகளையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல் பதவிக் காலத்தை நிறைவு செய்வதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது. மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் 11

## 3 எலும்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்று திங்கட்கிழமை புதிதாக 03 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 01 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் கடந்த 8 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு அகழ்வுப் பணியில், 31 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

## புதைகுழிகள் தொடர்பான உண்மைகளை கண்டறிக

### அரசிடம் கோருகிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஜூலை 29

உண்மைகளை மூடி மறைத்து இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. எனவே, புதைகுழிகள் தொடர்பிலான உண்மைகளை அரசாங்கம் கண்டறிந்து அதனை வெளிப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரியாலை புதைகுழி அகழ்வு பணிகளை நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ, சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு சுமந்திரன் கருத்து தெரிவிக்கும்போது-

இங்கு நடைபெறும் அகழ்வுப் பணிகளில் 11

## நாமலுக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 29

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக நேற்று அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக தவறியதன் காரணமாக பிடியாணை 11

## மதுபானசாலை உரிமங்கள் சிறீதரனுக்கு வழங்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 29

மதுபான சாலைகளுக்கான 200 மில்லியன் ரூபாய் பெறுமதியான உரிமங்கள் ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளதாக சிவில் புலனாய்வு முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சய மஹாவத்த தெரிவித்துள்ளார் .

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிக்கையில்-

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு எதிராக நாம் 11

## முன்னாள் கடற்படை தளபதி கைது

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் கடற்படை தளபதி ஓய்வு பெற்ற அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.


இவர் கடற்படை புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த போது பொத்துஹெரவை சேர்ந்த இளைஞர் ஒருவர் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற தீர்ப்பு வர முன்பு அரசியல்வாதிகளை குற்றவாளி முத்திரை குத்துவது நியாயமில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 29

கடந்த அரசாங்கங்களின்போது அரசியல்வாதிகள் குற்றம் செய்திருந்தாலும் நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முன்பு அவர்களை குற்றவாளி என்று முத்திரை குத்து வது நியாயமில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன் றுக்கு கருத்து வெளியிட்ட மகிந்த இதனை குறிப்பிட்டார்.

எனினும், அரசியல் ரீதியாக பழிவாங்குவது நியாயமில்லை என மகிந்த சுட்டிக்காட்டி யுள்ளார்.

தனது உடல்நலக் குறை பா டுகளை பயன்படுத்தி சிலர் தன்னை அரசியல் ரீதியாக பழிவாங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதுபோன்ற தவறான தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் வெளியிடப்படுவது வருத்தமளிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் முருகன் பெருந் திருவிழாவையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 24ஆம் திகதி வரை மாலை 6.45 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

துர்க்காதேவி மணி மண்ட பத்தில் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும் நிகழ்வில் தேவாரம் செல்வி கார்த்திகா யினி ரங்கநாதசர்மா, தலை மையுரையை இளங்கலைஞர் மன்ற உப தலைவர் எஸ். பத்மலிங்கம், ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சி. சிறீசற்குணராஜா ஆகியோர் வழங்குவர். தொடர்ந்து, கலாபூசணம் வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கல இசை நிகழும். (ஐ)

# மாணவியை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

பாடசாலைக்கு சகோதரனை ஏற்ற சென்ற மாணவி காணா மல்போயுள்ளதாக தாயார் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம், செல்லர் வீதியில் வசிக்கும் மாணவியான 17 வயதுடைய தனது மகளைக் கடந்த 15 ஆம் திகதியிலிருந்து காணவில்லை என தாயார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தனது சகோதரனை அழைத்து வருவதற்காக வீட்டி லிருந்து நண்பகல்வேளை மாணவி வழமைபோன்று சென்றுள்ளார். ஆனால், அவர் பாடசாலைக்கு சென்று மகனை ஏற்றிவரவில்லை. அத்துடன், வீட்டுக்கும் வரவில்லை.

இச் சம்பவம் தொடர்பாக உடனடியாக யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தேன். ஆனால் இரு வாரங்கள் ஆகியும் மகள் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை - என்றார். (அ)

# ரணவீரவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் ஒகஸ்ட 04ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் காஞ்சனா டி சில்வா நேற்று உத்தரவிட்டார்.

இந்த வழக்குடன் தொடர்பு டைய சந்தேக நபர்கள் மெய்நிகர் வழியில் நீதிவான் முன்னிலை யில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

2010ஆம் ஆண்டில் போலி ஆவணங்களை தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணியை விற்பனை செய்தமை தொடர்பில் பிரசன்ன ரணவீரவை கைது செய்யுமாறு நீதிமன்றால் பிடியாணை பிறப் பிக்கப்பட்டிருந்தது.

கைதில் இருந்து தப்பிக்க அவர் தலைமறைவானார். எனினும், கடந்த மே 07ஆம் திகதி நீதிமன் றில் சரணடைந்தார். இதைத் தொடர்ந்து அவர் விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்குடன் தொடர்பு டைய முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவர் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# காங்கேசன் வருகின்றது இந்திய சுற்றுலா கப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

இந்தியாவில் இருந்து கோர் டெலியா அதிசொகுசு சுற்றுலா பயணிகள் கப்பல் எதிர்வரும் ஒகஸ்ட் 15 மற்றும் 22 ஆகிய திகதிகளில் காங்கேசன்துறைக்கு வருகை தரவுள்ளது.

குறித்த சுற்றுலாப் பயணி கள் கப்பல் கடந்த 2023ஆம் ஆண்டு 9 தடவைகள் வந்திருந் தது. அத்துடன் 2024ஆம் ஆண்டு 6 தடவைகள் இலங்கை வந்தது. இது இவ்வாறு இருக்கையில் இந்த ஆண்டு மேற்குறித்த இரண்டு திகதிகளில் குறித்த கப்பல் இலங்கைக்கு வரவுள்ளது.

காலை காங்கேசன் துறை முகத்தை வந்தடையும் கப்ப லில் வரும் பயணிகள் யாழ்ப் பாணத்தில் உள்ள யாழ்ப்பா ணம் கோட்டை உள்ளிட்ட சில இடங்களை பார்வையிட்ட பின்னர் மீண்டும் இந்தியாவை சென்றடையவுள்ளனர். இந்த கப்பலானது பாரிய சுற்றுலாப் பயணிகள் கப்பலாகும். (அ-05)

# 4 அமைச்சுகளுக்கு புதில் அமைச்சர்கள்

கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க மாலைதீவுக்கான அரசு முறைப் பயணமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், நான்கு அமைச்சு களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிற்றல் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் நிதி, திட்ட மிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகங் களுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளி யுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும் பதில் அமைச் சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, தொழிலாளர் அமைச்சரும் பொருளாதார மேம்பாட்டு துணை அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ நிதி, திட்ட மிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சராகவும், டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சரான எரங்க வீரரத்ன டிஜிற்றல் பொருளாதார அமைச்சராகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜய சேகர பாதுகாப்பு அமைச்சரா கவும், வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரா கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# அறிவியல்நகர் பல்கலை வளாக காவலாளி நேற்று சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 29

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த காவலர் நேற்று திங்கட்கிழமை சடல மாக மீட்கப்பட்டார்.

அறிவியல் நகர் விவசாய பீட வளாகத்தில் பாதுகாப்பு கடமையில் இருந்த தர்மசீலன் ரகுராஜ் (வயது-34 ) என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டார்

சடலம் உடல் கூற்று பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசா லையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

குறித்த பாதுகாவலர் விவசாய பீடத்தின் மேல் மாடி யில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்திருக்கலாம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அலுமாரியில் ஆயுதங்கள் பெண் ஒருவர் கைதானார்

கொழும்பு, ஜூலை 29

ஒரு வீட்டில் அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரிவோல்வர், ஒரு கைத்துப் பாக்கி, வெடிமருந்துகள் மற்றும் இரண்டு கத்திகளை வைத்திருந் ததாக சந்தேகத்தின் பேரில் ஒரு பெண் கைது செய்யப்பட்ட தாக பண்டாரவளை பொலி ஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை, கஹத்தேவ லவைச் சேர்ந்த 43 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட் டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் வீட்டை சோதனை செய்தபோது, வீட்டில் உள்ள அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பொதியில் இந்தப் பொருட்கள் இருந்ததாகக் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு ரிவோல்வர், 28 வெடி மருந்துகள் மற்றும் ரிவோல்வ ருக்குப் பயன்படுத்தப்படும் 5 வெற்று குண்டுகள், 20 மி.மீ. பிஸ்டல், ஒரு மகசின் மற்றும் 2 வெடிமருந்துகள், ஒரு பிஸ்டல் கேஸ் மற்றும் 2 கத்திகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட் டன.

இது தொடர்பாக சந்தேகத் தின் பேரில் வீட்டில் இருந்த பெண் கைது செய்யப்பட்டார். (அ)

# நல்லூர் திருவிழாவுக்காக எடுக்கப்படும் மணலை பாதுகாத்து அடுத்த ஆண்டும் பயன்படுத்துங்கள்!

## யாழ். அரச அதிபர் பிரதீபன் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் திருவிழாவுக்காக இம்முறை எடுக்கப்படும் மணலைப் பாதுகாத்து அடுத்த ஆண்டிலும் பயன்படுத்துமாறு யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் திருவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது. இதற்கான மணல் விநியோகத்துக்காக யாழ்ப்பாணம் மாநகர சபை முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட சில இடையூறுகள் குறித்து விளக்கமளிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மண்ணுக்கான அனுமதியை பெறும் முயற்சியில், மருதங் கேணி பிரதேச செயலர் அந்தப் பகுதியில் உள்ள சமூகமட்ட அமைப்புகளுடன் கலந்துரை யாடி, அனுமதி பெற முயற்சித்த போதும், அதற்கு மறுப்புகள் வந்ததாகவும், பின்னர் நாகர் கோவில் மேற்கு விளையாட்டுக் கழகம் அனுமதி வழங்கியதைக் கொண்டே வனஜீவராசிகள் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், ஒரு தனிநபர் அரச காணியிலிருந்து மணல் பெற்றுத் தரும் முன்மொழிவும் முன்வைக்கப்பட்டதாகவும், அதற்கான அனுமதி கோரிக் கையை யாழ்ப்பாணம் கனிய வளத் திணைக்களம் மூலமாக கொழும்பு தலைமையகத்துக்கு அனுப்பியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக சுற்றாடல் அமைச்சர் மற்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் தொலைபேசியில் நேரடி முயற்சிகளை மேற் கொண்டு அனுமதி வழங்கு வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதன் பிறகு கனியவளப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தொடர்புடைய அலுவலர்களு டன் உரையாடி, அனுமதி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப் பட்டுள்ளது எனவும் அவர் உறுதிப்படுத்தினார்.

இந்நிலையில், சமூகமட்ட அமைப்பினர் சிலர் இந்த அனும திக்கு எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, இம்முறை மணல் விநியோகமான பின்னர், அந்த மணலைப் பாதுகாத்து அடுத்த ஆண்டு திருவிழாவுக்கும் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.07.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மாகாண சபை தேவையா - இல்லையா?

மாகாண சபைகள் நாட்டுக்குத் தேவையா அல்லது இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்க வேண்டிய காலம் வந்திருப்பதாக முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டிருக்கின்றார். தினேஷ் அவ்வாறு கூறுவது ஆச்சரியமானதல்ல. ஏனெனில், தன்னை தாராளவாதியாக காண்பித்துக்கொள்ளும் மிலிந்த மொறகொடவும் இவ்வாறான கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். ஆனால், ஒரு வாதத்தை இலகுவாக நிராகரித்துவிடவும் முடியாதுதான். அதாவது, வடக்கு - கிழக்கு மாகாண சபைகளின் காலம் 2018இல் முடிவடைந்தது. மாதங்களில் வேறுபாடுண்டு. இந்த வகையில் நோக்கினால் ஏழு ஆண்டுகளாக மாகாண சபைகள் தேர்தல் இல்லாமலேயே வடக்கு - கிழக்கு நிர்வகிக்கப்படுகிறது.

சிலர் இப்போதும் மாகாண சபைகளின் பெயரால் சம்பளம் மற்றும் ஏனைய வசிதிகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர. ஆனால், மக்களுக்கு அதனால் எந்தவொரு நன்மையும் ஏற்படவில்லை. மாறாக வீண்விரயம்தான் ஏற்படுகிறது. மாகாண சபைகள் வினைத்திறனற்ற ஒரு கட்டமைப்பாக இருக்கின்றது. எனவே, அதனை தொடர்ந்தும் வைத்திருப்பதில் என்ன பயன்?

இப்படி ஒருவர் கேட்கும்போது அது இலகுவில் நிராகரிக்க முடியாத வாதமாகவும்தான் இருக்கிறது. ஏனெனில், மாகாண சபைகள் தேர்தலை நடத்துங்கள், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்று இதுவரையில் வடக்கு - கிழக்கிலிருந்து மக்களின் குரல்கள் வெளிப்படவில்லை. அதிலும், தேவையான தமிழ் தரப்புகள், சிவில் சமூக அமைப்புகள் இது தொடர்பில் வாய்திறக்கவில்லை. தேவையற்ற விடயங்களுக்காக போராட்ட அறிவிப்புகளை வெளியிடுவோர், தேவையான மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமைக்கு எதிராக ஓர் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் மாகாண சபைகள் தேவையா அல்லது இல்லையா என்னும் கேள்வி எழுவது இயல்பானதுதான். ஆனால், இந்தக் கேள்விக்கான அவசியத்தை இல்லாமலாக்க வேண்டிய கடப்பாடு தமிழ் கட்சிகளுக்குத்தான் இருக்கின்றது. கடந்த பதினாறு ஆண்டுகளாக பொறுப்புக்கூறல் தொடர்பில் பேசி எதனையும் அடைய முடியாமை தொடர்பில் எந்தவொரு தமிழ் கட்சியும் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பெரும் நிதியில் செயல்பட்ட சிவில் சமூகக் குழுக்கள் என்பவையும் மக்களுக்கு பொறுப்புக் கூறவில்லை. இப்போதும் தங்களுடைய பழைய பொய்களை எவ்வாறு புதிய பொய்களின் மூலம் பாதுகாக்க முடியுமென்றே சிந்திக்கின்றனர்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டிய ஒரு ஜனநாயகக் கடப்பாடு அரசுக்குரியது. ஆனால், ஆட்சியாளர்கள் அதனை பல ஆண்டுகளாக பிற்போட்டு வருகின்றனர். ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிற்போடலுக்கு பின்னால் சம்பந்தன் தரப்பின் ஆதரவும் இருந்தது என்பதும் கசப்பான உண்மை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், பின்னர் வந்த ஆட்சியாளர்களும் அதனையே பின்தொடர்ந்தனர்.

தமிழ் கட்சிகள் அனைத்தும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு, அனைத்து கட்சி மகாநாட்டை கூட்ட வேண்டும். ஜனநாயகத்துக்கான கோரிக்கையாக மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதை வலியுறுத்தும் அதேவேளை, அரசமைப்பில் உள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அது தென்னிலங்கைக்கு ஒரு தெளிவான செய்தியை வழங்கும்.

# பூலோக கைலாசத்தில் இன்று கொடியேற்றம்

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுமாகிறது.



தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்குமிடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டது எனலாம்.

ஈழத் திருநாட்டில் முருகப் பெருமான் கதிர்காமத்திலும் மாவிட்டபுரத்திலும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலும் நல்லூரிலும் கந்தவனக் கடவையிலும் மண்டூரிலும் சித்தாண்டியிலும் வெருகல் முதலிய தலங்களில் கோவில் கொண்டிருக்கிறான்.

நல்லூர் என்றதும் நல்லூர் கந்தசுவாமியார் எம்முன் தோன்றுகிறார். கந்தனின் இந்தக் கோவில் அமைந்துள்ள யாழ்ப்பாண திருநகரில் நல்ல ஊர் நல்லூர் சைவ அனுட்டானங்களுக்கெல்லாம் ஒரு குன்றாக விளங்குகிறது.

ஈழத்தில் தமிழ் மன்னர்கள் கோலோச்சிய காலத்தில் அவர்களின் இராசதானியாகிய நல்லூரிலே நடுநாயகமாக விளங்கியது நல்லூர் கந்தசுவாமி கோயில்.

யாழ்ப்பாண இராச்சிய வரலாற்றுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் தல வரலாற்றுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. யாழ்ப்பாண மக்களது எழுச்சியும் வீழ்ச்சியும் கந்தசுவாமி கோயிலின் தல வரலாற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூர் கந்தசுவாமி இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றம் காண்கிறார்.

ஆலயத்தின் கொடிச்சீலையை செங்குந்த மரபினர் வருடா வருடம் நல்லூர் கந்த சுவாமி கோவிலில் அழகிய தேரில் வைத்து ஊர்வலமாக எடுத்து வந்து கொடுக்கின்ற மரபுண்டு.

இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லையம்பதியிலே கொடியேற்றம் நடைபெறுகிறது. கொடியேற்ற விழாவை காண்பதற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுகின்ற காட்சி பக்திபூர்வமான சூழ்நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கும்.

பெருந்திருவிழா ஆரம்பிக்கும் இன்றிலிருந்து அதிகாலை 4 மணி முதல் நல்லைக் கந்தன் ஆலயத்தில் நேர்த்திக் கடனை நிறைவு செய்வதற்காக அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார்கள் கூட்டம் "முருகா முருகா" என்று நாமங்களை சொல்லி திருவீதியை வலம்வரும். ஆலய சூழலில் சொற்பொழிவுகள், இசை அரங்குகள், போன்ற நிகழ்வுகள் நடைபெறும். நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா யாழ்ப்பாண மக்களின் கலாசார திருவிழாவாக - கந்தபுராண பெருமையைப் போற்றும் விழாவாகக் காணப்படுகிறது.

சைவமக்களாகிய நாமும் எமது புராதன பண்பாட்டு விழுமிய ஒழுங்கு நடைமுறைக்கேற்ப கலாசார ஆடைகள் அணிந்து சிவசின்னங்களை தரித்து கந்தப் பெருமானின் ஆன்மீக தேசிய பெருவிழாவில் கலந்து கொண்டு கந்தனின் அருள் பெற்று நல்லவண்ணம் வாழ்வோமாக...!

**மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்**

# நல்லூர் ஆலய சுற்றுவட்ட வீதி மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று திங்கட்கிழமை முதல் நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.


குறித்த வீதித் தடை எதிர்வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் மாற்று வீதிகள் ஊடாகவே பயணிக்க முடியும் என யாழ் மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய வீதித் தடைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமைபோல மாநகர சபையினால் வாகன அனுமதி அட்டை வழங்கப்படும். நிரந்தர தற்காலிக வியாபாரிகளுக்கு பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நெருக்கம் உண்டாகும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்று வருந்துவீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**துலாம்**
உங்களுடைய ஆலோசனை ஏற்கும்படி இருக்கும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகா ரிகள் வலிய வந்து உதவுவார்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**தனுசு**
உங்கள் பிடிவாத போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். தலைமையின் ஆதரவு கிட்டும். புதிய மாற்றம் ஏற்படும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரி குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும்.

# மாவையின் எண்ணத்தில் எந்நேரமும் இனம் பற்றிய சிந்தனையே இருக்கும்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மாவை சேனாதிராசாவின் எண்ணத்தில் எந்த நேரமும் இனம் பற்றிய சிந்தனையே இருந்தது. யாரையுமே நோகடிக்காத ஒரு நல்ல மனம் இருந்தது. அவர் இல்லாத இந்த ஆறு மாதங்களில் அவரது பலம் என்ன? அவரது பலவீனம் என்ன? என இன்று பலர் அறிவதற்கு தலைப்பட்டிருக்கிறார்கள் என இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சங்கானை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவை சேனாதிராசாவின் ஆறாவது மாத நினைவு பகிர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2001 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை விடுத



லைப் புலிகள் ஏற்படுத்தியிருந்த ஒற்றுமையை, 2010 இல் இருந்து அதற்கு பின்னர் ஓரளவுக்கு பேணியதில் மாவை சேனாதிராசாவுக்கு பெரும் பங்கு உண்டு.

என்னை அரசியலுக்குள் கொண்டு வந்ததும் அண்ணன் மாவை சேனாதிராசாவே. அந்த நேரம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த இராசநாயகத்தை அரசியலுக்குள் கொண்டு வர முயற்சித்தோம். சில காரணங்களுக்காக அவர் விலகியதால் மருத்துவர் சத்தியமூர்த்தி, அரியரட்ணம், தர்மரட்ணம் இப்படி சிலரை அரசியலுக்குள் கொண்டுவர முயற்சித்தும் அது பலனளிக்காமல் போகவே நான் அரசியலுக்குள் வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எமது இனத்தைப் பொறுத்தவரை இனிமேல் மாவை சேனாதிராசா போன்ற ஒரு தலைவரை நாங்கள் பெற முடியாது. இப்படியான ஒரு நல்ல மனிதருக்கு நிறைய மன வருத்தங்களை கொடுத்தவர்கள் பலர். மனோரீதியாக அவரை பாதிப்படையை செய்தவர்கள் பலர். ஆனால், வரலாறு அவர்களுக்கு அந்த தண்டனையை திருப்பி வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. இயற்கையும் வரலாறும் தண்டனையை வழங்கும். அதிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. நல்லது செய்தால் நல்லது கிடைக்கும், கெட்டது செய்தால் கெட்டது கிடைக்கும்”- என்றார். (எ)

# நல்லூர் மகோற்சவகால வெளிவீதி பஜனை மாணவர்களுக்கு சிவகுரு ஆதீனம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் கந்தப்பெருமான் மகோற்சவ காலத்தில் மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இறைபக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமை போல இவ்வருடமும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் நடைபெறும். பஜனை கொடியேற்றத் திருவிழாவிலிருந்து கொடியிறக்கத் திருவிழா வரை முருகப்பெருமான் மாலையில் வெளிவீதிவலம் வரும்போது நடைபெறும்.

இப்பஜனை நிகழ்வில் பங்குபற்றி நல்லைக் கந்தப்பெருமானின் திருவருளைப் பெற வருமாறு பாடசாலை மாணவர்களையும் அறநெறிப் பாடசாலை மாணவர்களையும் முருகப்பெருமான் அடியவர்களையும் சிவகுரு ஆதீனம் அழைக்கின்றது.

பஜனையில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகளும் (அதிபர்/பொறுப்பாசிரியர்/ சைவ சமய ஆசிரியர்/ சங்கீத ஆசிரியர்/ஆசிரியர்/ அறநெறி ஆசிரியர்) ஆன்மீக, சமய நிறுவனங்களும் மேலதிக விவரங்களைப் பெற விரும்புகின்ற ஆர்வலர்களும் 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு சிவகுரு ஆதீனம் அறிவித்துள்ளது.

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு அராலியில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -16 எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் “நான்மாடக் கூடலாண படலம்” என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 32 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சைவப்புலவர் செ. த. குமரன் “அசுரர் யாகப் படலம்” என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# பிரதேச சபையின் நடமாடும் சேவை

வவுனியா, ஜூலை 29

மக்களுடன் ஊராட்சி எனும் தொனிப்பொருளில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் நடமாடும் சேவை கந்தபுரம் வட்டாரத்தில் நடைபெறவுள்ளது என பிரதேச சபை தவிசாளர் பா. பாலேந்திரன் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவை மூலமாக விளம்பரப்பலகை கட்டணம், சோலைவரி, ஆதனப்பெயர் மாற்ற ஆலோசனைகள், எல்லைக்கோட்டு சான்றிதழ் சேவை, வியாபார உரிமம், வியாபார வரி, வியாபார பெயர்ப்பதிவு, வழி அனுமதிப்பத்திர ஆலோசனைகள், கட்டட அனுமதி ஆலோசனைகள், கழிவகற்றல் சேவை, வீதி விளக்கு கோரிக்கைகள், ஆயுர்வேத மருத்துவ சேவை, நூலக நடமாடும் சேவையும் அங்கத்துவ படிவம் வழங்கலும், முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளல், தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பு, 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள் பெறல் உள்ளிட்ட மேலும் பல சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

இன்று 29ஆம் திகதி கந்தபுரம் வட்டாரத்துக்குட்பட்ட தோணிக்கல் கிரம மண்டபத்தில் காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணி வரையில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபையை தனியார் மயப்படுத்த அரசு முயற்சி!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 29

**இலங்கை மின்சார சபையின் தனியுரிமையை தனியார் மயப்படுத்தவே இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மின்சார சபையின் தனியுரிமையை இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலம் ஊடாக குழித் தோண்டிப்புதைக்க முயற்சிக்கிறார் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு விவாதம் எதிர்வரும் 06 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. மின்சார சபைச் சட்டமூலம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தால் கடும் சர்ச்சைகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த அரசாங்கத்தால் இந்த சட்டம் தொடர்பான சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதன் பலர் இந்த சட்டமூலத்தை சவாலுக் குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்கள். நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு பின்னர் சட்டம் இயற்றப்பட்டது.

இலங்கை மின்சார சபை சட்டம் 2024.10.27 ஆம் திகதிமுதல் அமுல்படுத்தவிருந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் அந்த சட்ட அமுலாக்கத்தை இடைநிறுத்தியது.இதுவும் சட்டவிரோதமானதொரு செயற்பாடாகும்.

இலங்கை மின்சார சபை சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு இந்த அரசாங்கம் ஒரு குழுவை நியமித்தது.அந்த குழுவின் பரிந்துரை அறிக்கைக்கு அமைய இலங்கை மின்சார சபை(திருத்தச்) சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்தது.இந்த சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் 15 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணா அல்லது முரணற்றதா என்பதை மாத்திரமே உயர் நீதிமன்றம் ஆராயும்.நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக தாக்கங்கள் குறித்து உயர்நீதிமன்றம் அவதானம் செலுத்ததாது. இலங்கை மின்சார சபை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியானத்தை அரசாங்கம் முழுமையாக செயற்படுத்துமா என்பது சந்தேகத்துக்குரியதே.

இலங்கை மின்சார சபையின் தனியுரிமையை தனியார் மயப்படுத்தவே இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது.முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மின்சார சபையின் தனியுரிமையை இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலம் ஊடாக குழி தோண்டிப் புதைக்க முயற்சிக்கிறார்.

இந்த சட்டமூலத்தில் இலங்கை மின்சார சபையின் தனியுரிமையை 5 அல்லது 6 நிறுவனங்களாக கூறுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சட்டத்தை செயற்படுத்தியதன் பின்னர் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் பிற தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் நாட்டு மக்கள் அவதானம் செலுத்த வேண்டும்-என்றார்.

# திலினி பிரியமாலி கைது!

கொழும்பு, ஜூலை 29

பிரபல வர்த்தகர் திலினி பிரியமாலி நேற்று திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம நீதிமன்றில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் கடமைகளை செய்ய இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்குமாறு திலினி பிரியமாலிக்கு ஹோமாகம நீதவான் ரஜிந்தா ஜயசூரிய அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து திலினி பிரியமாலி நேற்றுக் காலை ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகியபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட திலினி பிரியமாலியை நீதிமன்றில் ஆஜர்படுத்த ஹோமாகம பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# நுண், சிறிய, நடுத்தர தொழில்முனைவோர் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு அவசியம்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 29

நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரிதும் பங்களிக்கின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களின் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வுகள் அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இந்தத் தொழில்முனைவோரின் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 50 வீதத்துக்கும் அதிக பங்களிப்பு அளிக்கும் இந்தத் தொழில்முனைவோர், இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பிரிவை தேர்தல் காலங்களில் மட்டுமே அன்புடன் அணுகி, பின்னர் கவனிக்காத நிலை இருப்பது முற்றிலும் ஏற்க முடியாதது.

கடந்த காலங்களில் பராட்டே சட்டம் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்ட போதிலும், தொழில்முனைவோர்களின் கடன் மறுசீரமைப்புகள் நடைபெறாததே தவறான முன்னுதாரணமாக அமைந்துள்ளது எனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 மற்றும் நாட்டின் வங்குரோத்து நிலை போன்ற சம்பவங்களில் இந்தத் துறை பெரும் பாதிப்பை சந்தித்தது.

அரசாங்கம் இப்போது இந்தத் தொழில்முனைவோர்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். தேர்தல்களின் போது அவர்கள் மீது காட்டிய அன்பையும் உறுதியையும் தற்போது காட்டவேண்டும். நிலையான தீர்வுகளை வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# விசேட சோதனையில் 1,182 கைது!

கொழும்பு, ஜூலை 29

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது 1,182 கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 410 பேரும் பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடி தொடர்புடையதாக கூறப்படும் 20 பேரும் உள்ளடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

நாட்டில் இடம்பெறும் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய அண்மைய நாட்களாக நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக நாடளாவிய ரீதியில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய 24 ஆயிரத்து 343 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் இதன்போது 9 ஆயிரத்து 727 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இதற்கமைய ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருந்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 1,182 பேர் கைது செய்யப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 230 கிராம் 159 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 220 கிராம் 415 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடி தொடர்புடையதாக கூறப்படும் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 410 சந்தேகநபர்களும் கைது செய்ய பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக 4 துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே கடந்த 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 2 கிலோ 100 கிராம் ஐஸ் போதைப்பொருள், ஒரு கிலோ 300 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 82 கிலோ கேரள கஞ்சா என்பனவும் மீட்கப்பட்டுள்ளது.

(அ)

# “தேசபந்து தென்னக்கோன் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யலாம்”

கொழும்பு, ஜூலை 29

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக செயற்படுவதற்கு இடைக்கால தடை விதித்து தீர்ப்பளித்த மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவில் அங்கம் வகித்த நீதியரசர் பாராளுமன்ற சிறப்பு குழுவின் தலைவராக செயற்பட்டு, தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குமாறு பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். தேசபந்து தென்னக்கோன் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்ய முடியும் என முன்னாள் நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிய கல்வி மறுசீரமைப்பு தேசிய அவசியத்தை வெளிப்படுத்துகிறது. கல்வி மறுசீரமைப்பு மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் இலவச கல்விக்கு 6 வீதம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்கள் விடுதலை முன்னணி இந்த போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்தது.தற்போது அந்த கோரிக்கைளை அவர்கள் செயற்படுத்தியுள்ளார்களா என்பதை வினவவேண்டும்.

புதிய கல்வி மறுசீரமைப்பில் வரலாறு மற்றும் அழகியற் கல்வி ஆகிய பாடங்கள் தெரிவு பாடங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. உலக நாடுகள் அனைத்தும் தமது நாட்டின் வரலாற்றை இளம் தலைமு றையினருக்கு கற்பிக்கிறது. நாட்டின் மீது பற்று தோற்றம் பெறவேண்டுமாயின் வரலாறு கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டும். அழகியற் கல்வி தமது பாரம்பரியத்தை வெளிப் படுத்தும் ஆகவே இவ்விரு பாடங்களை காட்டாயம் மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டும்

உத்தேச கல்வி மறுசீரமைப்புக்கு அரசாங்கம் வினைத்திறனான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.மாறாக குழுவின் பரிந்துரையை வைத்துக் கொண்டு மறுசீரமைப்பை எவ்வாறு முழு கல்வி துறையையும் மாற்றியமைக்க முடியும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார பாதிப்புக்கு மத்தியிலும் கல்வி மறுசீரமைப்புக்கு விசேட கவனம் செலுத்தினார்.இதற்காக 12 நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் குழுவை நியமித்து பெற்றுக்கொண்ட அறிக்கையை மீளாய்வு செய்து “உயர்கல்வி ஆணைக்குழு“சட்டமூலத்தை தயாரித்தோம்.இருப்பினும் பல்வேறு காரணிகளால் இந்த சட்டமூலத்தை எம்மால் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவதற்காக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து விதப்புரைகளை நியமிப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற சிறப்புக்குழுவின் செயற்பாடு தொடர்பான சட்டசிக்கலை இதற்கு முன்னரும் குறிப்பிட்டிருந்தேன்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு அப்போதைய ஜனாதிபதியால் அரசியலமைப்பு பேரவைக்கு முன்வைக்கப்பட்ட சிபாரிசு மற்றும் வழங்கப்பட்ட அனுமதி ஆகியவற்றை சவாலுக் குட்படுத்தியே உயர்நீதிமன்றத்துக்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் கொள்கையையே அரசாங்கம் பின்பற்றுகிறது!

### சுட்டிக்காட்டுகிறார் நாமல்



கொழும்பு, ஜூலை 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையையே அரசாங்கம் பின்பற்றுகிறது எனவும் கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த வேண்டுமாயின் முதலில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆசிரியர் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள் சங்கங்கள் நீக்கப்பட வேண்டும் எனவும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வின்போது கருத்து வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொருளாதார மீட்சிக்காக இந்த அரசாங்கம் ,துவரையில் முறையான திட்டங்களை செயற்படுத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுத்த பொருளாதார கொள்கைகளையே முழுமையான செயற்படுத்துகிறது.

உத்தேச கல்வி மறுசீரமைப்பு பற்றி பேசப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரித்த கல்வி கொள்கையையே இந்த அரசாங்கம் செயற்படுத்த முயற்சிக்கிறது.

திட்டத்தின் உள்ளடக்கத்தில் பெயர்கள் மாத்திரமே மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

கல்வித்துறையில் உண்மையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமாயின் மக்கள் விடுதலை முன்னணியின் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் முதலில் நீக்கப்படவேண்டும்.

ஏனெனில் மக்கள் விடுதலை முன்னணியின் பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் தான் பகிடிவதை கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தின.

இன்றும் செயற்படுத்துகிறது.

ஆகவே சிறந்த கல்வி மறுசீரமைப்புக்கு அரசாங்கம் இவ்விரு விடயங்களையும் செயற்படுத்த வேண்டும்.

நவீன உலகுக்கு பொருத்தமான வகையில் கல்வி மறுசீரமைப்பு செயற்படுத்த வேண்டும் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை.

கல்வி மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய மக்கள் சக்தியின் அரசியல் கொள்கையை கல்வி மறுசீரமைப்பில் உள்ளடக்க இடமளிக்க முடியாது-என்றார். (அ)

## யோஷித, அவரது பாட்டி ஆகியோருக்கு எதிரான விசாரணை செப்ரெம்பர் 22 இல்!

கொழும்பு, ஜூலை 29

சட்டவிரோதமாக சொத்துக்களை கையாண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைகளை எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஹன் மாபா பண்டார முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதேவேளை, யோஷித ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைக்கும் போது இந்த வழக்கில் தடயவியல் கணக்காய்வு அறிக்கையை ஆதாரமாக முன்வைத்தோடு, கணக்காய்வு அறிக்கையை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மின்னஞ்சல் செய்திகள் அடங்கிய 26 இறுவெட்டுகள், 8 யு.எஸ்.பி., வன்தட்டு, 1 மடிக்கணினி ஆகியவற்றை அணுகி ஆய்வு செய்யவும் அனுமதி கோரிய நிலையில் இந்தக் கோரிக்கைக்கு தாம் ஆட்சேபனைகளை தெரிவிக்கப் போவதில்லை என்று அரச தரப்பு சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதன்படி, இந்த முறைப்பாடு எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரயில் ஓட்டுநர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 29

ரயில் ஓட்டுநர்கள் இன்று நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

லொக்கோமோட்டிவ் இயந்திர பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.ஏ.யு. கோந்தசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கற்ற சமிஞ்சை கட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாததால் குறித்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்பு காரணமாக நாடு முழுவதும் உள்ள அனைத்து தொடருந் துகளும் சேவையில் ஈடுபடாது என்றும் லொக்கோமோட்டிவ் இயந்திர பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கு விசாரணை செப்.24 இல்!

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2010 மற்றும் 2012 இற்கு இடையில் அமைச்சராகப் பணியாற்றியபோது, தனது சட்டபூர்வமான வருமானத்தை விட அதிகமாக, கிட்டத்தட்ட 150 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை மேர்வின் சில்வா சட்டவிரோதமாகச் சம்பாதித்ததன் மூலம் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்ததாக அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு வழக்கு தொடர்ந்தது. (அ)

## மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்க விசேட திட்டம்!



கொழும்பு, ஜூலை 29

மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டை எதிர்த்துப் போராடுவதற்காகப் பாடசாலை மட்டத்தில் குழுக்களை நிறுவுவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

1080 பாடசாலைகளில் ஏற்கனவே இதுபோன்ற குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குழுவிலும் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதி ஆகியோர் அடங்குவர்.

25 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில், போதைப்பொருள் பரவுவதைத் தடுப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

## வெலிகம சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புள்ள சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜூலை 29

தேசிய மக்கள் சக்தி கட்சியின் வெலிகம பிரதேச சபை உறுப்பினர் தாரக நாணயக்காரவின் வீட்டில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பகுதியில் வைத்து 33 வயதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை ஏற்றிச் சென்றதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை உறுப்பினருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறி, வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி அதிகாலை 4.40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத இரண்டு பேர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

அதன் பின்னர் விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸாரினால் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## போதை வியாபாரிகளுடன் தொடர்பு 3 பொலிஸ் அலுவலர்கள் பணி நீக்கம்!

கொழும்பு, ஜூலை 29

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களுடன் தொடர்பினை பேணிவந்த கொழும்பு,

மருதானை பொலிஸ் நிலையத்தின் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு-மருதானை பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களுடன் குறித்த மூவரும் தொடர்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில்,

அவர்களை எதிர்வ ரும் 31 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, சம்பவத்தை அடுத்து குறித்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பதவி விலகாதுவிட்டால் அருணவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

### கூறுகிறார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, ஜூலை 29

பாதுகாப்பு பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர உடனடியாக அந்த பதவியிலிருந்து விலக வேண்டும் அல்லது ஜனாதிபதியினால் பதவி நீக்கப்பட வேண்டும் என, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு இல்லையேல் அவருக்கு எதிராக அவநம்பிக்கை பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்குத் தாம் தயாராகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல்கள் இடம் பெற்றபோது, கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, தற்போது பாதுகாப்பு பிரதி அமைச்சராகப் பதவி வகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.


தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏப்ரல் தாக்குதல் தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறினாலும், அதுபற்றிய தகவல்களை வெளியிடுவதற்குத் தயாராக இல்லை எனவும் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பொரளையில் கோர விபத்து ஒருவர் மரணம்! பலர் காயம்!!



கொழும்பு, ஜூலை 29

பொரளை, கனத்தை சந்தி பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பயங்கர வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், இந்த விபத்தில் ஐந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேக்குகள் சரியாக வேலை செய்யாத கிரேன் லொறி ஒன்று பல வாகனங்கள் மீது மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸார் தெரி வித்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(அ)

# தேசபந்து தொடர்பான அறிக்கை பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில்

கொழும்பு, ஜூலை 29

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை விசாரணைக்கு உட்படுத்திய குழுவின் அறிக்கை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படவுள்ளது.

அதன்படி, விசாரணை அறிக்கை மீதான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தென்னக் கோன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப் பட்ட குழு, தென்னக்கோனை குற்றவாளி என்று ஒருமனதாகத் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகும் விகிதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 29

இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் விகிதம் தற்போது அதிகரித்து வருகின்றது.

இந்தநிலையில், கொழும்பில் உள்ள பிரபலமான மகளிர் பாடசாலையொன்றில் பயிலும் ஐந்து மாணவிகள் போதைப் பொருளை உட்கொண்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து மாணவிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, அவர்களுக்குப் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

9ஆம் தரத்தில் பயிலும் மாணவிகள் சிலர் போதைப் பொருளை உட்கொண்டதாகக் குறித்த பாடசாலையின் அதிபரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய ஐந்து மாணவிகளும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளுக்கமைய, குறித்த ஐந்து பேரில் ஒருவரே போதைப் பொருளை வழங்கியதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை மருதானை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் போதைப் பொருளினால் பல்வேறு உயிரிழப்பு சம்பவங்களும் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மரக்கறி விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 29

போஞ்சி மற்றும் கறிமிளகாயை தவிர ஏனைய அனைத்து மரக்கறிகளின் விலைகளும் வேகமாக குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக நாட்டில் தற்போதைய பருவ நிலை உருளைக்கிழங்கு விளைச்சலுக்கு தகுந்த காலமாகும்.

ஆனால், தற்போது உருளைக்கிழங்குக்கு பதிலாக வேறு மரக்கறிகள் பயிரிடப் படுகின்றமையால் ஏனைய மரக்கறிகளுக்கான கேள்வி குறைந்துள்ளது.

இதனாலேயே காய்கறிகளின் விலைகளும் வேகமாக குறைவடைவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# கடந்த அரசுகளில் கல்வி அரசியலுக்கு பயன்பாடு

## பிரதமர் ஹரிணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 29

**கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கல்வியைப் பற்றிப் பெருமளவில் பேசியபோதிலும் அவர்கள் முன்னெடுத்து வந்த அரசியல் கலாசாரத்தினால் கல்வித் துறையில் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டன.பெரும்பாலும் அவர்கள் கல்வியை தமது அரசியல் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்காகப் பயன்படுத்தினர்.**

தமது பெயரால் கட்டிடத்தைத் திறந்து வைப்பது போன்ற கண்காட்சி அரசியலுக்காகத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கல்வித்துறைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட மகளிர் ஒன்றியம் இரத்தினபுரி நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் சுமையாக அமையாத கல்வி முறைமையை உருவாக்குவது தமது அரசியல் இயக்கத்தினுள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்ட ஒரு விடயம்.

இது தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தமானது புதியதோர் பாடப் புத்தகத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமல்ல ஒட்டுமொத்த கல்வி முறைமையையும் மாற்றி அமைக்கும் ஒரு செயல்திட்டமாகும்.

நாம் இந்த முறைமைக்குள் கண்டிருக்கும் பல முக்கிய பிரச்னைகள் உள்ளன.

பரீட்சைகளை மையமாகக் கொண்ட இக்கல்வி முறைமையினால் சிறார்கள் மீது ஏற்படும் அழுத்தம் அதனால் பெற்றோருக்கு ஏற்படும் அழுத்தம் அதனால் ஏற்பட்டிருக்கும் போட்டியினால் உருவாகி இருக்கும் தீமையான சமூக விளைவுகள் போன்ற அனைத்துப் பிரச்னைகளுக்கும் விடை காண நாம் இக்கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் முயற்சிக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கல்வியைப் பற்றிப் பெருமளவில் பேசியபோதிலும் கல்வித் துறை சார்ந்த பிரச்னைகளை இனங்கண்டபோதிலும் அவர்கள் முன்னெடுத்து வந்த அரசியல் கலாசாரத்தினால் கல்வித்துறையில் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டன. பெரும்பாலும் அவர்கள் கல்வியையும் தமது அரசியல் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்காகப் பயன்படுத்தினர்.

கல்வியின் தரத்திற்கு எத்தகைய நிலைமை ஏற்பட்டபோதிலும் தமது பெயரால் கட்டடத்தைத் திறந்து வைப்பது போன்ற கண்காட்சி அரசியலுக்காகத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திய இந்த அரசியல்வாதிகள் தமது அரசியலுக்காகக் கல்வியைப் பயன்படுத்தி அத்துறைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று கடந்தகால அரசாங்கங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டைப் படிப்படியாகக் குறைத்து கல்வியின் சுமையை பெற்றோர் மீது சுமத்தின.

கல்வித்துறைக்கு மிகவும் முக்கியமான அம்சமாக விளங்கும் ஆசிரியர் உள்ளிட்ட கல்வித்துறை நிர்வாக சேவையில் கடமையாற்றவேண்டியவர்களின் தொழில்சார் வளர்ச்சியை ஏற்படுத்தி மனிதவளத்தை மேம்படுத்துவதற்குப் பதிலாக அந்த மனிதவளத்திற்குப் பாதகங்களை விளைவிக்கும் துறைகளை வளர்ச்சி அடையச் செய்தார் கள்.

கல்விச் சீர்திருத்தம் பற்றி கடந்த அரசாங்கங்கள் கலந்துரையாடி யிருந்தபோதிலும் அவ்வாறு கலந்துரையாடுகின்ற அதேவேளையில் கல்வி முறைமையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மனித வளங்கள் அடிப்படை வசதிகள் முதலீடுகள் கல்வித்துறைக்கு ஒதுக்கப்படவில்லை என்பதும் தெரியவருகிறது.

அவ்வாறு மறுசீரமைப்புக்குத் தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாவிட்டால் இத்தகைய கல்விச் சீர்திருத்தங்களில் தீர்க்கமான மாற்றத்தை ஏற்படுத்துவது கடினம்.

ஆயினும் நாம் மிக நேர்த்தியாகத் திட்டமிட்டு சமூகத்தினுள் இதைப் பற்றிய ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சமூகத்தில் ஏற்படவேண்டிய கருத்து மாற்றம் உள்ளிட்ட அனைத்து விடயங்களைப் பற்றியும் கவனம் செலுத்தி உண்மையான ஒரு சமூக மாற்றத்திற்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஆகையினால் இது பற்றிய பரந்த சமூகக் கலந்துரையாடலை ஏற்படுத்தும் பொறுப்பு உங்களையே சாரும்.

அந்த வகையில் கல்வி ரீதியாக முன்னேற்றமடைந்த ஒரு நாடாக எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்வதற்கும் அதனுள் ஒழுக்கமான ஒரு சமூகத்தை ஏற்படுத்துவதற்கும் உலக நாடுகளுடன் தோளோடு தோள் நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் முன்னெடுத்துச் செல்லும் இந்தக் சமூகக் கலந்துரையாடல்களின் செய்தியை சமூகமயப்படுத்தும் செய்தியாளர்களாகச் செயல்பட முன்வருமாறு அழைப்பு விடுக்கிறோம்-என்றார்.

(அ)

# கோவ்பே வசதி நேற்று முதல் செயற்பாட்டில்!

கொழும்பு, ஜூலை 29

மேல் மாகாணத்தில் நேற்று முதல் கோவ்பே ஊடாக நேரடியாக அபராதம் செலுத்தும் முறை செயல்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்குத் தேவையான அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும்,

ஆயிரம் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளுக்கு கையடக்க தொலைபேசிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# அபிவிருத்திக்கு வெளிநாடுகளிடம் நிதியை எதிர்பார்க்கும் அரசாங்கம்

கொழும்பு, ஜூலை 29

அதிவேக நெடுஞ்சாலைகள் அமைத்தல் போன்ற பாரியளவிலான அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து நிதியைப் பெறுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களை ஏலத்தில் எடுப்பதற்கு எதிர்பார்க்கும் நிறுவனங்கள், உள்நாட்டு வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதைத் தவிர்க்கும் வகையிலேயே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமைச்சரவைக்கு இந்த விடயத்தை அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உள்ளூர் ஒப்பந்ததாரர்கள் அரச வங்கிகளிடமிருந்து கடன் பெறும் நிலையில், கிராமப்புற வீதி அபிவிருத்தி போன்ற ஏனைய அபிவிருத்தி திட்டங்களுக்கான உதவி கிடைக்கப் பெறாது எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

கடவத்தை மற்றும் மீரிகம இடையேயான மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை நிறைவு செய்வதற்கு, சீன அரசுக்குச் சொந்தமான மெட்டலர்ஜிகல் கோப்பரேஷன் ஒவ் சீனா லிமிடெட் எனப்படும் கட்டுமான நிறுவனத்தை அரசாங்கம் தெரிவு செய்துள்ளது.

இந்த நிலையிலேயே, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறித்த அறிவித்தலை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உதவி தேவையான யாரையும் ஜனாதிபதி நிதியம் கைவிடவில்லை

## கிழக்கு மாகாண நிகழ்வில் சபாநாயகர்



மட்டக்களப்பு, ஜூலை 29

**ஜனாதிபதி நிதியம் யாருடைய தனியார் நிதியமல்ல. உதவி தேவையான யாரையும் ஜனாதிபதி நிதியம் கைவிடவில்லை என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.**

ஜனாதிபதி நிதியத்தால் செயல்படுத்தப்படும் 2023 - 2024 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் கிழக்கு மாகாண நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த நுண்கலை பீடத்தில் சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 6 பாடப் பிரிவுகளின் கீழ் உயர் பெறுபேறுகளைப் பெற்ற 10 மாணவர்கள் வீதம் 360 மாணவர்களுக்கு தலா 100,000 ரூபாய் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதற்காக ஜனாதிபதி நிதியம் 36 மில்லியன் ரூபாய் செலவிட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம் சமீபத்தில் வட மாகாணத்தில் தொடங்கப்பட்டது. இதன் இரண்டாவது திட்டம் தென் மாகாணத்திலும் மூன்றாவது திட்டம் கிழக்கு மாகாணத்திலும் செயல்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை ஏனைய மாகாணங்களிலும் செயல்படுத்த ஜனாதிபதி நிதியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த நிகழ்வில் கருத்துத்தெரிவித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன மேலும் கூறுகையில், ஜனாதிபதி நிதியம் இதுவரை உதவி தேவையான யாரையும் கைவிடவில்லை. நாட்டின் பிள்ளைகளின் கல்விக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி நிதியம் யாருடைய தனியார் நிதியமல்ல என்றும் அது நாட்டு மக்களின் பங்களிப்புகளுடன் இயக்கப்படும் நிதியம் என்றும் சுட்டிக்காட்டிய சபாநாயகர், அதன் நன்மைகள் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகர மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜே. ஜே. முரளிதரன் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், கிழக்கு மாகாண அரச அதிகாரிகள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (எ)

# கிழக்கு மாகாண பௌத்த தேரரின் பாதுகாப்பு மீளப் பெறப்படவில்லை


கொழும்பு, ஜூலை 29

கிழக்கு மாகாணத்தில் மூத்த பௌத்த தேரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள தகவலை பொலிஸ் திணைக்களம் மறுத்துள்ளது.

பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தேரருக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் கொழும்பிலிருந்து நியமிக்கப்பட்டனர்.

எனினும், நீண்ட தூரத்திலிருந்து பணிகளை செய்வதில் நிர்வாகச் சிக்கல்கள் இருந்ததால், பாதுகாப்புப் பணிகளை மிகவும் திறமையாகக் கையாள உள்ளூர் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க முன்மொழியப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளது. (எ)




# மாணவர்களுக்கு உதவி


சாய்ந்தமருது, ஜூலை 29

கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் நேற்று முன்தினம் நடைபெற்றது

ஒன்றியத்தின் தவிசாளர் எம். எம். நஸீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை ஸாஹிரா கல்லூரி, அல் மிஸ்பா மகா வித்தியாலயம், அல் பஹ்ரியா மகா வித்தியாலயம், மஹ்மூத் மகளிர் கல்லூரி மற்றும் சாய்ந்தமருது மல்ஹறுஸ் ஸம்ஸ், அல் ஜலால் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 37 மாணவர்களுக்கு இதன்போது புலமைப்பரிசுகள் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண நட்புறவு ஒன்றியத்தின் உறுப்பினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர். (எ)

# இரா.சம்பந்தனின் ஓராண்டு நினைவு வணக்க அஞ்சலி



வவுணதீவு, ஜூலை 29

மறைந்த பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் ஓராண்டு நினைவு வணக்க அஞ்சலி நிகழ்வு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வவுணதீவுப் பிரதேச கிளையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மட்டு. மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (எ)

# சம்மாந்துறை பொலிஸ் நிலைய அணிவகுப்பு, பரிசோதனை

சம்மாந்துறை, ஜூலை 29

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2025 ஆம் ஆண்டுக்கான மாதாந்த அணிவகுப்பு மரியாதையும் பரிசோதனையும் பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.



சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர் தலைமையில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அஸார் கலந்து கொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

மேலும் பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்றுச் சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் என்பனவற்றை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இதன்போது பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வளப் பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார். (எ-01)

# ரம்புட்டான், மங்குஸ்தான் பழங்கள் விற்பனை அமோகம்

கல்முனை, ஜூலை 29

அம்பாறை மாவட்டத்தில் வெப்பநிலை மாற்றத்தால் பொது மக்கள் குளிர்ச்சி தரும் பழங்களை வாங்கி வருகின்றனர். குறிப்பாக மங்குஸ்தான், ரம்புட்டான், துரியன், கொய்யா போன்ற அரிய மற்றும் மூலிகை மருத்துவ பண்புகள் கொண்ட பழவகைகளின் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

ஜூலை முதல் செப்ரெம்பர் வரை ரம்புட்டான் பருவகாலம் காரணமாக நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, ஒலுவில், நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் ரம்புட்டான் பழங்கள் ஒரு கிலோ 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றன.

100 ரூபாய்க்கு 18 முதல் 20 பழங்கள் வரை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. மங்குஸ்தான் பழங்கள் ஒரு கிலோ 300 முதல் [illegible] ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றன. (எ)

# திருமலையில் நினைவேந்தல்

திருகோணமலை, ஜூலை 29

திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் அரங்கிற்கு முன்னால் 1983 ஆம் ஆண்டு ஜூலை 23 முதல் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன் உட்பட 52 பேர் மற்றும் ஜூலை கலவரத்தில கொலை செய்யப்பட்ட 3000 பொதுமக்களின் நினைவாகவும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயத்துக்குள் நுழைந்து பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு

## கொங்கோவில் கொடூரம்: 21 பேர் உயிரிழப்பு

கின்ஷாசா, ஜூலை 29

**கொங்கோவில் தேவாலயத்துக்குள் நுழைந்து பயங்கர வாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.**

இதேவேளை, தேவாலயத் துக்கு அருகே இருந்த சில வீடு கள் மற்றும் கடைகள் தீவைத்து கொளுத்தப்பட்டன.

கொங்கோ நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள கொமாண்டா பகுதியில் அமைந்துள்ள ஒரு தேவாலயத்தில் நேற்று முந்தி னம் ஞாயிற்றுக்கிழமை பிரார்த் தனை கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது திடீரென தேவாலயத்துக்குள் ஆயுதங்களுடன் புகுந்த பயங் கரவாதிகள், அங்கு இருந்தவர் கள் மீது சரமாரியாக துப்பாக் கிச்சூடு நடத்தினர்.

இதனால் அங்கிருந்த மக்கள் பயத்தில் சிதறியடித்து ஓடத் தொடங்கினர். அவ்வாறு ஓடிய வர்களை துரத்திச் சென்று பயங் கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். மேலும் தேவாலயத்துக்கு அருகே இருந்த சில வீடுகள் மற்றும் கடைகள் தீவைத்து கொளுத் தப்பட்டன. இந்தக் கொடூரத் தாக்குதல் சம்பவத்தில் 21 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் அரசு ஆதரவு பெற்ற மத அடிப் படைவாத அமைப்பை சேர்ந்த கிளர்ச்சியாளர்களுக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்துள் ளது. தாக்குதலில் படுகாயமடைந் தவர்கள் பலர் மருத்துவமனை யில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (எ)

# பாகிஸ்தானில் ரயர் வெடித்ததில் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து

இஸ்லாமாபாத், ஜூலை 29

பாகிஸ்தானில் ரயர் வெடித் ததில் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதனால், 9 பேர் பலியாகினர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ் லாமாபாத்திலிருந்து நேற்று முன்தினம் காலை 40 பயணி களை ஏற்றிக்கொண்டு லாகூருக்கு பஸ் ஒன்று சென்றுகொண்டி ருந்தது. இந்த பஸ் எம்-2 மோட் டார் பாதை வழியாகசென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென பஸ்ஸின் ஒரு ரயர் வெடித்தது. இதனால் சாரதி யின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதி அருகில் உள்ள பள்ளத் தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளா னது.

இந்த கோர விபத்தில் சம் பவ இடத்திலேயே 8 பேர் பரி தாபமாக உயிரிழந்தனர். மேலும் 30இற்கும் மேற்பட் டோர் காயமடைந்தனர். இத னைத் தொடர்ந்து விபத்து குறித்து தகவலறிந்த பொலிஸ ார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்த னர். விபத்தில் காயமடைந்தவர் களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் காயமடைந் தவர்களில் ஒருவர் மருத்துவம னையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் பலி எண்ணிக்கை 9 ஆக அதிகரித்தது. விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)



# துருக்கியில் காட்டுத்தீ 14 பேர் உயிரிழந்தனர்

அங்காரா, ஜூலை 29

துருக்கியில் காட்டுத்தீயால் 14 பேர் உயிரிழந்தனர்.

துருக்கியில் கடந்த சில வாரங்களாக காட்டுத்தீ பரவி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த நிலையில், அந்த நாட்டின் வடமேற்கே அமைந்த 4ஆவது மிகப் பெரிய நகரான பர்சா நகரில் காட்டுத்தீ பரவி வருகிறது. இதனால், தலைநகர் அங்காராவுடனான வீதிப் போக் குவரத்து இணைப்பு துண்டிக் கப்பட்டுள்ளது.

தீயை அணைக்க 1900 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர் கள் சென்றுள்ளனர். இதுபற்றி வனத்துறை அமைச்சர் இப்ரா ஹிம் யுமாக்லி கூறும்போது, நேற்று முன்தினம் 84 இடங்க ளில் தீயணைப்பு வீரர்கள், தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். கராபுக் உட்பட துருக் கியின் வடமேற்கு பகுதியானது மிகுந்த அச்சுறுத்தலுக்கு இலக் காகியுள்ளது எனக் கூறினார்.

துருக்கியில் இதுவரை இல் லாத வகையில் 122.9 டிகிரி வெப்பநிலை பதிவாகியுள்ளது என அந்த நாட்டு வானிலை நிலையம் தெரிவித்துள்ளது. தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர் ஒரு வர் உயிரிழந்தார். காட்டுத்தீக்கு இதுவரை 14 பேர் பலியாகினர். 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தீயில் கருகி விட்டன. 1700 பேர் பாது காப்பான இடம் தேடி புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். (எ)

# ராஜராஜன், ராஜேந்திர சோழனுக்கு தமிழகத்தில் பிரம்மாண்ட சிலைகள்

## இந்திய பிரதமர் மோடி அறிவிப்பு




அரியலூர், ஜூலை 29

மாமன்னர்கள் ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழனுக்கு தமிழகத்தில் பிரம்மாண்ட சிலை கள் அமைக்கப்படும் என்று இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ் வரர் கோவில் வளாகத்தில், மத் திய கலாசாரத் துறை சார்பில் ராஜேந்திர சோழனின் பிறந்த நட்சத்திரமான ஆடி திருவா திரை விழா, கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோவில் கட்டத் தொடங்கிய ஆயிரமா வது ஆண்டு விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படை யெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என முப் பெரும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரி விக்கையில்,

"சோழர்கள் கடற்படை, வரி அமைப்புகள், நகராட்சி நிர்வா கங்கள் மூலம் வலிமையான அரசை உருவாக்கினர். இந்தியா வின் பாதுகாப்பை முன்னிலைப் படுத்தி, ஒப்ரேஷன் சிந்தூர் மூலம் உலகம் தற்போது இந்தியாவின் உறுதியான நடவடிக்கைகளை பார்த்து வியக்கிறது.

ராஜேந்திர சோழன் தனது தந்தையின் கோவிலைவிட உய ரம் குறைந்த விமானம் அமைத் தார். இது தாழ்மையின் அடை யாளம். அவ்வாறு புகழ்பெற்ற ராஜராஜ சோழனுக்கும் ராஜேந் திர சோழனுக்கும் தமிழகத்தில் பிரம்மாண்ட சிலைகள் அமைக் கப்படும்"- என்றார். (எ)

# கம்போடியாவுக்கு செல்ல வேண்டாம்

புதுடில்லி, ஜூலை 29

தாய்லாந்தை தொடர்ந்து இந்தியர்கள் கம்போடியாவுக்கும் செல்ல வேண்டாம் என்று இந் தியத் தூதரகம் அறிவுறுத்தியுள் ளது.

தாய்லாந்து - கம்போடியா இடையே நிலவும் எல்லை மோதல் காரணமாக இரு தரப் பினரும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த மோதலில் இருதரப்பிலும் பலி யானோரின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்தது. இதனால் இரு நாடுகள் இடையே போர் மூளும் அபாயம் உள்ளது.

எனவே, எல்லை பகுதியில் வசிக்கும் சுமார் ஓர் இலட்சத்து 70 ஆயிரம் பேர் வெளியேற்றப் பட்டு தற்காலிக நிவாரண முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர். இதனையடுத்து பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண ஐ.நா. சபை இரு நாடுகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது. ஆனால், இதுவரை எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை. எனவே எல்லை பகுதியில் போர்ப்பதற் றம் நிலவுகிறது.

இதனால் இந்தியர்கள் யாரும் தாய்லாந்து செல்ல வேண்டாம் என தூதரகம் சார்பில் அறிவுறுத் தப்பட்டது. இந்த நிலையில் தற் போது இந்தியர்கள் கம்போடி யாவுக்கும் செல்ல வேண்டாம் என தூதரகம் எச்சரிக்கை விடுத் துள்ளது. (எ)

# ரஷ்யா - வடகொரியா இடையே நேரடி விமான சேவை தொடக்கம்

மொஸ்கோ, ஜூலை 29

ரஷ்யா - வடகொரியா இடையே நேரடி விமான சேவை தொடங்கியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையே 2022ஆம் ஆண்டு போர் தொடங்கியது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப் பிய நாடுகள் செயல்படுகின்றன. அதேபோல் ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா இராணுவ உதவியை வழங்கி வருகிறது. எனவே, இரு நாடுகள் இடையேயான உறவில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே கடந்த மாதம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவி லிருந்து வடகொரியா தலைநகர் பியாங்க்யாங் இடையே ரயில் சேவை தொடங்கப்பட்டது. ஆனால், இதன் பயண நேரம் சுமார் 10 நாட்கள் ஆகும். இத னால் நேரடி விமான சேவை தொடங்க இரு நாடுகளும் நட வடிக்கை எடுத்து வந்தன. அந்த வகையில் தற்போது மொஸ்கோ -பியாங்க்யாங் இடையே நேரடி விமான சேவை நேற்று முன்தி னம் தொடங்கியது. இந்த விமா னம் வாரத்துக்கு 2 முறை இயங் கும் என ரஷ்ய விமான போக்கு வரத்து நிறுவனமான ரோசாவி யாட்சியா தெரிவித்துள்ளது. (எ)

# வெறும் 50 ஆயுதங்களில் பாகிஸ்தான் பணிந்தது

## இந்திய விமானப்படை தளபதி

புதுடில்லி, ஜூலை 29

வெறும் 50 ஆயுதங்களில் பாகிஸ்தான் பணிந்தது என்று இந்திய விமானப் படை துணைத் தளபதி தெரிவித்தார்.

ஏரோஸ்பேஸ் பவர் என்ற தலைப்பிலான கருத்தரங்கு புது டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முப்படை தளபதி ஜெனரல் அனில் சவு கான், இந்திய விமானப்படை துணைத் தளபதி நம்தேஸ்வர் திவாரி உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஜெனரல் அனில் சவுகான் கூறுகையில், "ஒப்ரேஷன் சிந்தூர் இன்னும் தொடர்வதால், நாம் ஆண்டு முழுவதும் போருக்குத் தயார் நிலையில் இருக்க வேண் டும்" -என்றார்.

விமானப்படை துணை தள பதி திவாரி கூறுகையில், "ஒப்ரே ஷன் சிந்தூரில் நாம் செய்ததை விட சிறந்த உதாரணம் வேறு எதுவும் இருக்க முடியாது. வெறும் 50இற்கும் குறைவான வான்வழி ஆயுதங்களை மட் டுமே நாம் பயன்படுத்தினோம். இது நமது எதிரி நாட்டை போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்தது. இந்த உதார ணம் குறித்து அறிஞர்கள் ஆய்வு செய்ய வேண்டும்"- என்றார். (எ)

# காஸாவின் முக்கிய பகுதிகளில் இராணுவ நடவடிக்கை நிறுத்தம்

## இஸ்ரேல் இராணுவம் அறிவிப்பு

காஸா, ஜூலை 29

மனிதாபிமான நோக்கங்க ளுக்காக காஸாவின் சில பகுதிக ளில் மூலோபாய அடிப்படையி லான இராணுவ நடவடிக்கை நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அல்மவாசி, டெய்ர் அல் பலா, காஸா நகரம் ஆகிய பகு திகளில் மறு அறிவித்தல்வரும் வரை இராணுவ நடவடிக்கை நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகளிர் யூரோ கிண்ணம்

# ஸ்பெயின் அணியை வீழ்த்தி சம்பியனானது இங்கிலாந்து

பேசல், ஜூலை 29

மகளிருக்கான யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடரில் இங்கிலாந்து அணி சம்பியனானது. சுவிட்சர்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உலக சம்பியனான ஸ்பெயின் அணியை இங்கிலாந்து அணி வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் யூரோ கிண்ணத்தை இங்கிலாந்து அணி தக்கவைத்துள்ளது. கடந்த 2022இல் நடைபெற்ற மகளிருக்கான யூரோ கிண்ணத் தொடரில் முதல் முறையாக யூரோ கிண்ணத்தை இங்கிலாந்து வென்றிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை அன்று பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆட்ட நேரத்தில் சுமார் 65 சதவீதம் பந்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது ஸ்பெயின் அணி. ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் தரப்பில் கால்டென்டே கோல் பதிவு செய்தார். பின்னர் இங்கிலாந்து அணி தரப்பில் ரூசோ 57ஆவது நிமிடத்தில் கோல் பதிவு செய்தார். இதனால் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனானது.




மேற்கொண்டு இரு அணியும் கோல் பதிவு செய்ய முடியாததால் 90 நிமிடங்கள் நிறைவடைந்தது. பின்னர் கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்திலும் இரு அணியின் தரப்பிலும் கோல் பதிவு செய்யப்படவில்லை. வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்டி நடத்தப்பட்டது. இதில் 3-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று சம்பியனானது. (எ)



வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ்


## ஆண்கள் இரட்டையரில் இத்தாலி ஜோடி சம்பியன்

வாஷிங்டன், ஜூலை 29

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் ஆண்கள் இரட்டையர் பிரிவில் இத்தாலி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இத்தாலியின் சைமோன் பொலேலி-ஆண்ட்ரியா வவசோரி ஜோடி, மொனாக்கோவின் ஹியூகோ நைஸ்-பிரான்சின் ரோஜர் வாஸ்லின் ஜோடி உடன் மோதியது.

இதில் தொடக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இத்தாலியின் சைமோன் பொலேலி-ஆண்ட்ரியா வவசோரி ஜோடி 6-3, 6-4 என்ற செற் கணக்கில் எளிதில் வென்று சம்பியனானது. (எ)



## 4 ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது

மான்செஸ்டர், ஜூலை 29

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

இந்த போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே இந்தியா 358 ஓட்டங்களும் இங்கிலாந்து 669 ஓட்டங்களும் அடித்தன.

பின்னர் 311 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 63 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் அடித்திருந்தது. சுப்மன் கில் 78 ஓட்டங்களுடனும் கே.எல். ராகுல் 87 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து இந்திய அணி 137 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த நிலையில் 5ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே கே. எல். ராகுல் 90 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வாஷிங்டன் சுந்தர் களமிறங்கினார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய சுப்மன் கில் சதத்தை நிறைவு செய்தார். சதம் அடித்த சிறிது நேரத்திலேயே சுப்மன் கில் 103 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தருடன் சேர்ந்தார். இருவரும் விக்கெட் இழந்து விடக்கூடாது என்ற நோக்குடன் நிதானமான ஆட்டத்தை கடைப்பிடித்தனர். ரவீந்திர ஜடேஜா, ஹாரி புரூக் பந்து வீச்சில் சிக்ஸர் அடித்து தனது 5ஆவது சதத்தை கடந்தார்.

இதனையடுத்து வாஷிங்டன் சுந்தர் தனது முதல் சதத்தை எட்டினார். அத்துடன் போட்டி சமநிலையில் முடித்து கொள்ளப்பட்டது. அப்போது இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 143 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 425 ஓட்டங்கள் எடுத்து 114 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது. வாஷிங்டன் சுந்தர் 101 ஓட்டங்களுடனும் ரவீந்திர ஜடேஜா 107 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சதம் அடித்ததுடன் 6 விக்கெட்கள் வீழ்த்திய இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஆட்டநாயகன் விருது பெற்றார். 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி தொடங்குகிறது. (எ)

## சம்பியன்ஷிப் பட்டியலில் இலங்கை இரண்டாமிடம்

மான்செஸ்டர், ஜூலை 29

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் இலங்கை அணி இரண்டாமிடம் பிடித்துள்ளது.

5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில் இந்தியா - இங்கிலாந்து இடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்ததை அடுத்து டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தப்பட்டியலில் அவுஸ்திரேலியா (100 சதவீதம்) முதல் இடத்தில் உள்ளது. இலங்கை (66.67 சதவீதம்) 2ஆம் இடத்திலும் இங்கிலாந்து (54.17 சதவீதம்) 3ஆம் இடத்திலும் இந்தியா (33.33 சதவீதம்) 4ஆம் இடத்திலும் பங்களாதேஷ் (16.67 சதவீதம்) 5ஆம் இடத்திலும் உள்ளன. 6 முதல் 9 இடங்கள் வரை முறையே மேற்கு இந்திய தீவுகள், நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள்(புள்ளிகள் ஏதும் இன்றி) உள்ளன. (எ)

## வரலாறு படைத்த பென் ஸ்டோக்ஸ்


மான்செஸ்டர், ஜூலை 29


டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் இங்கிலாந்து அணித் தலைவராக பென் ஸ்டோக்ஸ் வரலாறு படைத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது. இங்கிலாந்து தரப்பில் அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து அணி 157.1 ஓவர்களில் 669 ஓட்டங்கள் குவித்தது. ஜோ ரூட் (150), பென் ஸ்டோக்ஸ் (141) சதமடித்து அசத்தினர்.

பென் ஸ்டோக்ஸ் 141 ஓட்டங்கள் குவித்து, 5 விக்கெட்கள் வீழ்த்தியதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே போட்டியில் சதம் மற்றும் 5 விக்கெட்கள் வீழ்த்திய முதல் இங்கிலாந்து அணித் தலைவர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார். (எ)





## வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் கனடா வீராங்கனை சம்பியன்

வாஷிங்டன், ஜூலை 29

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் கனடாவின் லேலா சம்பியன் பட்டம் வென்றார்.

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கனடாவின் லேலா பெர்னாண்டஸ், ரஷ்யாவின் அன்னா கலின்ஸ்கயா உடன் மோதினார்.

இதில் சிறப்பாக விளையாடிய லேலா 6-1, 6-2 என்ற செற் கணக்கில் எளிதில் வென்று சம்பியனாகி அசத்தினார். இந்தப் போட்டி 70 நிமிடங்கள் நடைபெற்றது. நடப்பு தொடரில் முன்னணி வீராங்கனைகளான ஜெசிகா பெகுலா, எலினா ரைபகினா ஆகியோரை லேலா பெர்னாண்டஸ் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சதத்தில் சாதனை படைத்த இந்தியா

மான்செஸ்டர், ஜூலை 29

இந்திய அணி சதத்தில் சாதனை படைத்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தின் 2 ஆவது இன்னிங்ஸில் இந்தியா தரப்பில் சுப்மன் கில், வாஷிங்டன் சுந்தர், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் சதம் அடித்து அசத்தினர். இதன் மூலம் அவர்கள் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளனர். அதாவது, இந்திய அணியின் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 2 ஆவது இன்னிங்ஸில் மூன்று வீரர்கள் சதமடித்திருப்பது இதுவே முதல்முறையாகும். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசியல்வாதிகளுக்கு...

கேட்கும் துணிச்சல் இருக்கிறதா", என்று கேள்வியெழுப்பினார்.

தமீழீழ விடுதலை இயக்கம் ( ரெலோ ) சனிக்கிழமை மாலை யாழ்நகர் தந்தை செல்வா கலையரங்கத்தில் ஏற்பாடு செய்திருந்த கறுப்பு ஜூலை வெலிக் கடைச் சிறை தமிழ்க் கைதிகள் படுகொலை நினைவேந்தல் - தமிழ் தேசிய வீரர்கள் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

வெறுமனே தேசியவாத சுலோகங்களை எழுப்புவதன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கையை தமிழ் அரசியல்வாதிகளினால் இனிமேலும் வென்றெடுக்க முடியாது. உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடங்களாக தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகளில் வெறுப்படைந்த காரணத்தினாலேயே தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவில் வாக்களித்தார்கள்.

தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களித்த தன் உண்மையான காரணத்தை புரிந்து கொண்டு அவர்களின் பிரச்னைகளை தீர்ப்பதில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவும் அவரது அரசாங்கமும் அக்கறை காட்டியிருந்தால் உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்க் கட்சிகளினால் மீண்டும் அவற்றின் செல்வாக்கை அதிகரிக்க முடியாமல் போயிருக்கும். தங்களது வாக்கு வங்கிக்குள் ஊடுருவல் செய்த காரணத்தினாலேயே ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் தமிழ் அரசியல்வாதிகள் கர்ணகடூரமாக தாக்கிப் பேசுகிறார்கள். தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணத்தை அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாடுபூராவும் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட 1983 ஜூலை இனவன்செயல்களின் 42ஆவது வருடத்தை நாம் நினைவுகூர்ந்து கொண்டிருக்கிறோம். அந்த வன்செயல் நாட்களில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்க் கைதிகளுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். அந்த படுகொலைகள் குறித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பிரச்னை கிளப்பியபோது அன்றைய பிரதமர் ரணசிங்க பிரேமதாச சிறைச்சாலை வன்முறைகளில் சிங்களக் கைதி ஒருவரும் கொல்லப்பட்டதாக பொறுப்பற்ற விதமாக பதிலளித்தார்.

1983 ஜூலையை கறுப்பு ஜூலை என்று வர்ணித்தவர் காலஞ் சென்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் மேர்வின் டி சில்வா. அவர் அவ்வாறு வர்ணித்த அதேவேளை அந்த ஜூலைக்கு பிறகு இலங்கையில் எல்லாமே கறுப்பாகத் தான் இருக்கிறது என்று எழுதிய சிங்களப் பத்திரிகையாளர்களும் இருந்தார்கள்.

கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்கு பின் என்பதைப் போன்று இலங்கையின் அரசியல் வரலாறும் கறுப்பு ஜூலைக்கு முன் , கறுப்பு ஜூலைக்கு பின் என்று பிரித்துப் பார்க்கப்படுகிறது.

ஜே. ஆர். ஜெயவர்தனவின் அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அந்த கொடூரமான வன்செயல்கள் இலங்கையில் இனங்களுக்கு இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை ஓர் எல்லைக்கோடாக அமைந்தன.

கறுப்பு ஜூலை வன்செயல்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கோடிக் கணக்கான அவர்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் தமிழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தார்கள். தமிழ் அரசியல்வாதிகளின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்கு சிங்கள மக்கள் வெளிக்காட்டிய இயல்பான எதிர் வினையே என்று கூறி அந்த வன்செயல்களை ஜனாதிபதி ஜெயவர்தன நியாயப்படுத்தினார்.

கறுப்பு ஜூலையில் அவலங்களை அனுபவித்த தமிழ் மக்களிடம் அன்றைய அரசாங்கத்தின் எந்தவொரு தலைவரும் மன்னிப்பு கோரியதுமில்லை, வருத்தம் தெரிவித்ததுமில்லை.

கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கை இனப் பிரச்னையில் இந்தியா நேரடியாக தலையிட்டது. 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாண சபைகள் அறிமுகப் படுத்தப்பட்டன. ஆனால், இந்தியாவின் அந்த தலையீட்டினதும் மாகாண சபைகளினதும் இன்றைய நிலையை தமிழ் மக்களும் அவர்களின் அரசியல்வாதிகளும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மாகாண சபைகளுக்கு எட்டு வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மாகாணசபை தேர்தல்களை நடத்தி அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கங்களை இந்தியாவினால்கூட வழிக்கு கொண்டுவர முடியவில்லை. இறுதியில் மாகாண சபைகள்கூட இல்லாத ஒரு மக்கள் கூட்டமாக தமிழ் மக்கள் அநாதரவாக விடப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. தற்போது இலங்கை அரசமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடான மாகாண சபையை பயன்படுத்தி தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தமிழ்க் கட்சிகள் இயன்றவரை முயற்சிக்கவேண்டும் -என்றார். (அ-02)

## முன்னாள்...

காணாமல்போன சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைவாக கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## நல்லூரானுக்கு...

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

10ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதியும், 22ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் 19ஆம் திகதியும் 24ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறுநாள் 22ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (அ)

## மதுபானசாலை ...

குற்றபுலனாய்வு பிரிவின் நிதி குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தோம்.

இந்த முறைப்பாட்டுக்கான பதிலை நாடாளுமன்ற உறுப்பினர் நீதிமன்றில் அல்லது பொலிசில் குறிப்பிட வேண்டும். ஆனால் அவர் சமூக ஊடகங்களில் என் பெயரை பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் நான்கு கூட்டங்களில் பதில் கூறினார். வடக்கிலும் கட்சிப் பண்பு, இனவாதம், மதவெறி அடிப்படையில் பணம் சம்பாதிக்கும் அரசியல்வாதிகள் உள்ளனர். ஆனால், நல்லவர்களும் இருக்கிறார்கள்.

இது சகோதரத்துவத்தின் நாடு. நாம் ஒன்றாக வாழவேண்டும் . டொப் வையின் ஸ்ரோர்ஸ் கடந்த 2024 மே 19இல் கதிர்வேல் ஜெயகுமார் என்னும் பெயரில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடந்து கடந்த 2024 ஜூலை 4ஆம் திகதி மற்றைய மதுபானசாலை கனகசுந்தரம் ஜீவநேஸ்வரம் என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு உரிமங்களும் ரூ.200 மில்லியன் மதிப்பில் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து வழங்கப்பட்ட அரசியல் லஞ்சமாகும் மதுபான உரிமங்கள் ரணில் காலத்தில் வெளியிடப்பட்டன. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இவை வழங்கப்பட்டுள்ளன. மேலும், பல உரிமங்களை பற்றிய முழுகோப்புகளும் எங்களிடம் உள்ளன. அவற்றை நாம் விரைவில் வெளிக்கொண்டுவருவோம் -என்றார். (அ)

## மாகாண சபைகள் தேர்தலை நடத்தாமல்...

அரசாங்கம் படுதோல்வியடையும் என புதிய ஜனநாயக முன்னணியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெறவில்லை. இருப்பினும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளுங் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் வாக்குவங்கி வீதம் 23 இலட்சத்தால் குறைவடைந்தது.

மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இதற்கு கடந்த அரசாங்கங்களும் பொறுப்புக்கூறவேண்டும். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதாக தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. இருப்பினும் இதுவரையில் அதற்குரிய எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தனிநபர் பிரேணையை முன்வைத்துள்ளனர். இருப்பினும் அந்த பிரேரணைகள் தொடர்பில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். இருப்பினும், மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசாங்கம் படுதோல்வியடையும் என்பதால் தேர்தலை நடத்துவதற்கு காத்திரமான எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுப்பதில்லை -என்றார்.(அ)

## அரியாலை...

உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

மனிதப் புதைகுழியில் கண்டறியப்படும் ஒவ்வொரு மனித எலும்புக்கூட்டின் பின்னணியிலும் நினைத்துப் பார்க்க முடியாத துன்பத்துக்கு முகங்கொடுத்த ஒரு குடும்பம் இருக்கிறது. எனவே, இந்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பான தடயவியல் விசாரணைகள் தனிமனித கௌரவத்துக்கான மரியாதையுடனும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முழுமையான பங்கேற்புடனும் முன்னெடுக்கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி இக்குற்றங்களின் பாரதூரத்தன்மையைக் கருத்திற்கொண்டு நோக்குகையில், இச்செயன்முறையானது உச்சபட்ச நேர்த்தியுடனும், சட்ட நியமங்களுக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச மேற்பார்வை இன்றியமையாததாகும். அரியாலை மனிதப் புதைகுழி அகழ்வானது இலங்கையின் நிலைமாறுகால நீதிப்பொறிமுறையில் மிகமுக்கியமானதொரு தருணத்தைப் பிரதிபலிக்கின்றது.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவினால் 1998ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வாக்குமூலத்தை அடுத்து செம்மணி மனிதப்புதைகுழி தேசிய - சர்வதேச ரீதியில் அவதானம் பெற்றது.

அன்று முதல் இன்றுவரை இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாக மிகமோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பொறுத்தமட்டில் நீண்டகாலமாகத் தொடரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்குக்கான அழுத்தமானதும், வலிமிகுந்ததுமான அடையாளமாக அது திகழ்கின்றது.

சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் அரியாலை (செம்மணி அருகே) சித்துபாத்தியில் மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருப்பதானது உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன அடையப்படுவதற்கு வழிவகுக்கக்கூடியவகையில் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நம்பத்தகுந்த, வெளிப்படைத்தன்மை வாய்ந்த, உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறான விசாரணைகள் அவசியம் என்பதை உணர்த்துகின்றது.

தற்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அரியாலை மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகளைக் கண்காணித்துவரும் நிலையில், முன்னெப்போதையும் விட இப்போது அவ்வலுவலகம் தனது சுயாதீனத்துவத்தை உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

-என்றுள்ளது. (அ)

## நாமலுக்கு...

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்று சீராக்கல் மனு ஊடாக நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## மாகாண சபைகள்...

கடந்த 2014 செப்ரெம்பர் 20 ஆம் திகதியுடன் மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்தது. அதனைத் தொடர்ந்து கடந்த 11 ஆண்டுகளாக தேர்தல்கள் நடத்தப்படாமல் உள்ள நிலைமை கவலைக்குரியதாக அமைந்துள்ளது என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆறு ஆண்டுகளுக்கும் ஒரு முறை தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றாலும், பிந்தைய அரசுகள் இதற்குத் தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாமதம், பொதுமக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடையே பெரும் அக்கறையை ஏற்படுத்தியுள்ளது என்றும், மாகாண மட்டத்தில் தேர்தல் நடைமுறையை மீட்டெடுக்கவேண்டிய அவசியம் அதிகரித்துள்ளதாகவும் பவ்ரல் கூறியுள்ளது.

தேர்தல்களை நடத்தத் தவறுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கும் ஜனநாயகத் தத்துவங்களுக்கும் எதிரானது என பவ்ரல் எச்சரித்துள்ளது. (அ)

## புதைகுழிகள்...

குழந்தைகள், வயது குறைந்தவர்களின் எலும்பு கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. எலும்புக் கூடுகள் அசாதாரணமாக சூழலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

சர்வதேச நிபுணத்துவ உதவிகளை இலங்கை பெற்றுக்கொள்ளவேண்டும். அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளை முறையாக பாதுகாப்பதற்குக்கூட சர்வதேச நிபுணத்துவ மேற்பார்வை வேண்டும் அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கம் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக கூறுகிறது. உண்மைகளை மறைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது எனவே புதைகுழிகள் தொடர்பிலான உண்மைகளைக் கண்டறிய சர்வதேச நிபுணர்களை நாட்டுக்கு அழைத்து , அவர்களிடம் புதைகுழி விவகாரங்களை கையளித்து , எவ்வித தலையீடுகளும் இன்றி அவர்கள் சுயாதீனமாக செயல்பட்டு அது தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்க பரஸ்பர வரி பேச்சுவார்த்தை தோல்வி

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 29

**அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 30 சதவீத பரஸ்பர வரி குறைப்பு தொடர்பில் அமெரிக்காவுடன் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது. இந்த வரி விவகாரத்தில் அரச அதிகாரிகள் அரசாங்கத்துக்கு தவறான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். அமெரிக்காவின் இறக்குமதிகளுக்கு வரி விலக்களிப்பதால் பாரிய பாதிப்பு இலங்கைக்கு ஏற்படாது என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர வரி விடயத்தில் நாட்டின் நலன் தொடர்பில் மாத்திரமே அவதானம் செலுத்தவேண்டும். இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டது.

இலங்கையின் பிரதிநிதிகளுக்கும், அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு அமைய 44 சதவீத வரி 30 ஆக குறைக்கப்பட்டது. அதிகளவான வர்த்தக இருப்பினை கொண்டுள்ள ஆசிய வலய நாடுகளுக்கு இலங்கையை காட்டிலும் குறைவான வரி வீதம் விதிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட 30 சதவீத வரி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியுடன் அமுல்படுத்தப்படவுள்ளது. 44 சதவீத வரி குறைப்பு தொடர்பில் அரசாங்கம் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது அமெரிக்காவின் இறக்குமதிகளுக்கு இலங்கையில் விசேட வரி விலக்களிக்க வேண்டும் என்று குறிப்பிட்டோம். அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி தலைவர்கள் கூட்டத்தில் அமெரிக்காவின் இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டோம். ஆனால் இவ்விரு விடயங்கள் குறித்தும் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 30 சதவீத பரஸ்பர வரி குறைப்பு தொடர்பில் அமெரிக்காவுடன் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது. இந்த தீர்வை வரி விவகாரத்தில் அரச அதிகாரிகள் அரசாங்கத்துக்கு தவறான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். அமெரிக்காவின் இறக்குமதிகளுக்கு வரி விலக்களிப்பதால் பாரிய பாதிப்பு இலங்கைக்கு ஏற்படாது.

அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் ஆசிய வலய நாடுகள் புதிய வரி கொள்கையை அமுல்படுத்தி பயனடைந்துள்ளன. இலங்கை தரப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் அமெரிக்காவிடமிருந்து மாத்திரம் எவ்வாறு முழுமையான வரி மறுசீரமைப்பின் உச்ச பயனை எதிர்பார்க்க முடியும்-என்றார். (அ)

## அநுரவுக்கு மாலைதீவில் நேற்று அமோக வரவேற்பு!



கொழும்பு, ஜூலை 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாலைதீவுக்கான அரச விஜயத்தை ஆரம்பித்து நேற்று முற்பகல் வெலானா சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையின் மரியாதைக்கு மத்தியில் ஜனாதிபதியை அந்நாட்டு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு வரவேற்றார்.

ஜனாதிபதியை வரவேற்கும் முகமாக மாலைதீவு வெலானா சர்வதேச விமான நிலையத்தின் விசேட விருந்தினர் வருகை முனையத்தில் சிறுமிகள் குழுவொன்று அழகிய கலாசார நடனத்தை நிகழ்த்தியதுடன், ஜனாதிபதி அந்த சிறுமிகளுடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை வரவேற்கும் உத்தியோகபூர்வ வைபவம் மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சு தலைமையில் மாலைதீவின் தலைநகரான மாலேயில் உள்ள குடியரசு சதுக்கத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த அரச விஜயத்தில் கலந்துகொண்டுள்ளனர். (அ)

## மாணவர்களுக்கு இனி இரண்டு இடைவேளை

கொழும்பு, ஜூலை 29

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் பாடசாலை நேரங்கள் மற்றும் இடைவேளை நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.

அதன்படி, பாடசாலைகள் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும், மேலும் இரண்டு இடைவேளைகளை வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பாடசாலை நேரம் ஒரு நாளைக்கு 50 நிமிடங்கள் அதிகரிக்கும் என்பதால், மாணவர்களால் அதைத் தாங்க முடியாது.

எனவே தினமும் காலை 10.10 மணி முதல் காலை 10.30 மணி வரை மற்றும் மதியம் 12.10 மணி முதல் மதியம் 12.20 மணி வரை இரண்டு இடைவேளை வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவனத்தின் உதவி பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசோக டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், வகுப்பு நேர அட்டவணைகள் மாற்றப்பட்டுள்ளன. அதன்படி, காலை 7.40 முதல் 8.30 மணி வரை, காலை 8.30-9.20 மணி வரை, காலை 9.20 -10.10 மணி வரை, காலை 10.30 -11.20 மணி வரை, காலை 11.20 முதல் மதியம் 12.10 மணி வரை மற்றும் மதியம் 12.20 -1.10 மணி வரை, பிற்பகல் 1.10-2.00 மணி வரை என நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. (அ)

## சந்திராணி பண்டாரவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டாரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சஹன் மாபா பண்டார நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சந்திராணி பண்டார , 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சராக கடமையாற்றியபோது தனது அன்புக்குரியவர்களுக்கு சட்டவிரோதமாக அரச பதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல ஊழல் குற்றங்களில் ஈடுபட்டதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது.


இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்னாள் அமைச்சர் சந்திராணி பண்டார சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி, சந்திராணி பண்டாரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையை தொடர்ந்து செயலாற்ற முடியாமல் இருப்பதாகவும், அதற்கான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில் கொண்ட நீதவான் இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (அ)

## நல்லூரானுக்கு கொடிச்சீலை நேற்று கையளிக்கப்பட்டது!





யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், கொடியேற்றத்துக்காக சம்பிரதாயபூர்வமாக கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து சிறிய தேர் ஒன்றில் கொடிச்சீலை பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்து. (அ-05)

## சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைய முற்பட்ட இந்தியர் உட்பட இருவர் கைது!

மன்னார், ஜூலை 29

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் இலங்கைக்குள் நுழைய முற்பட்ட இந்தியர் ஒருவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த படகொன்றை கடற்படையினர் வழிமறித்து சோதனையிட்டனர். இதன்போது படகினுள் சந்தேகத்துக்கு இடமான முறையில் இருவர் பயணித்தமையை அவதானித்த கடற்படையினர் அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது ஒருவர் நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்தவர் எனவும் , மற்றைய நபர் இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர் என கடற்படையினரின் விசாரணைகளில் தெரிய வந்ததை அடுத்து இருவரையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் முன்னுக்கு பின் முரணான தகவல்களை அவர்கள் வழங்கிய நிலையில் , மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.